


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் 35 உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.என். செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா ஆகியோர் வழங்கிய காட்சி.

### சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் - விடுதலை போராட்ட வீரர்

# ஒண்டிவீரன் 253ஆவது நினைவுதினம்! திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. மரியாதை செலுத்தினார்!

நெல்லை, ஆக. 21-

விடுதலை போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் 253வது நினைவு தினத்தை முன்னிட்டு அரசு சார்பில் நெல்லை பாளையங்கோட்டை நீதிமன்றம் எதிரில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் திருஉருவச்சிலைக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் கழக துணை பொது செயலாளர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வனத்துறை அமைச்சர் மதிவேந்தன்,

கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி.மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வகாப் (பாளை) ரூபி மனோகரன் (நாங்குநேரி) மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தான் ஒண்டிவீரன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப் பட்டது.தி.மு.க ஆட்சியில் அருந்ததிய சமுதாயத்திற்கான மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் சிலரால் வழக்கு தொடர்ந்த போதிலும் அந்த வழக்கில் மிகப்பெரிய வெற்றியை முதல்வர் அவர்கள் பெற்று கொடுத்துள்ளார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடக்கும் ஆட்சி ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுக்கும்,உழைக்கக்கூடிய அரசாக செயல்பட்டு வருகிறது.வாக்களித்தவர் களுக்கும்,வாக்களிக்காதவர்களுக்கும் பாரபட்சம் இல்லாமல் உழைக்கக்கூடிய அரசாக செயல்படுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்க வேண்டும் என்று பாரபட்சம் இல்லாமல் நடக்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. அருந்ததியதற்கான மூன்று சதவீத இட ஒதுக்கீடு தேவை என்பதே தி.மு.க.வின் நிலைப்பாடு. தொடர்ந்து முதலமைச்சர் அவர்களால் அந்த நிலைக்காக போராடப்படும் எந்த விதத்திலும் அதனை விட்டுக் கொடுக்க மாட்டோம். இட ஒதுக்கீடு என்பது சட்டரீதியான போராட்டத்தின் மூலம் கிடைக்க பெற்றுள்ளது.

மக்களுக்கு கிடைக்க கூடிய உரிமைகளுக்காக தி.மு.க. தொடர்ந்து போராடி வருகிறது.ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் வரக்கூடிய நிதி வரவில்லை,மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி வரவில்லை,மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நிதி முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் கேட்டும் அது கிடைக்கப் பெறவில்லை.எதுவும் கிடைக்காத நிலையில் ஒன்றிய அரசுடன் எப்படி நெருக்கமாக இருக்க முடியும்.

மக்களிடமும்,மனிதருடனும் பழகும் போது எளிமையாக அன்பாக பழகக் கூடியவர் முதலமைச்சர் அவர்கள். அதே வேளையில் தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காக போராடும் போது தலைவர் கலைஞரை அவர்களை போல முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருப்பார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்கள்.

### விளாத்திக்குளம் சட்டமன்றத் தொகுதியில் முடிவுற்ற

# திட்டப்பணிகள் - கனிமொழி கருணாநிதி இன்று தொடங்கி வைக்கிறார்!

## தூத்துக்குடி வடக்கு மாவட்டச்செயலாளர் அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 21-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் 21.08.2024ல் விளாத்திக்குளம் சட்டமன்ற தொகுதியில் பல்வேறு முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கிறார். இது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. பி.கீதா ஜீவன் அறிக்கை வருமாறு:

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (21.08.2024 - புதன்கிழமை) தூத்துக்குடி



வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் முடிவுற்ற பல்வேறு பணிகளை மாவட்டச் செயலாளராகிய எனது (பி.கீதாஜீவன்) தலைமையில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் முன்னிலையில் திறந்து வைக்கிறார்.

சம்பந்தபட்ட பகுதிகளின் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டு கொள்கிறேன்.

இன்று (21.08.2024)- காலை 10.00 மணி- மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, எத்திலப்பநாயக்கன்பட்டி சமுதாய நலக்கூடம் திறப்பு விழா, காலை 10.15 மணி- எட்டையாபுரம், அங்கன்வாடி மையம் திறப்பு விழா, காலை 10.25 மணி- எட்டையாபுரம் காவல் நிலையம், எதிர்புறம் பயணியர் நிழற்குடை திறப்பு விழா காலை - 10.40 மணி, தாப்பாத்தி சமுதாய நலக்கூடம் திறப்பு விழா, காலை 10.55 மணி- புதூர் பயணியர் நிழற்குடை திறப்பு விழா அரசு ஆரம்ப சுகாதார நிலையம் எதிர்புறம், காலை 11.15 மணி- பூதலப்புரம் கலையரங்கம் திறப்பு விழா, காலை 11.30 மணி - N.ஜெகவீரபுரம் கலையரங்கம் திறப்பு விழா, காலை 11.50 மணி -சூரங்குடி மகளிர் சுய உதவி குழு கட்டிடம் திறப்பு விழா, நண்பகல் 12.15 மணி- தத்தனேரி ஊராட்சி,ஊசி மேசியாபுரம் நியாய விலை கடை திறப்பு விழா, நண்பகல் 12.25 மணி- தத்தனேரி ஊராட்சி, மாதராஜபுரம் நியாய விலை கடை திறப்பு விழா, நண்பகல் 12.45 மணி- புளியங்குளம் குறுங்காடுகள் பார்வையிடுதல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### குன்றக்குடியில் - நாளை

# குன்றக்குடி அடிகளார் 699வது குருபூஜை விழா!

## நூற்றாண்டு அன்னதான கட்டடம் திறப்பு!

சிவகங்கை, ஆக. 21-

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் குன்றக்குடி அடிகளார் மடம் உள்ளது. இந்த குன்றக்குடி மடத்தின்699வது அடிகளாரான திருவண்ணா மலை குரு முதல்வர் திருவருள் தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரியார் என்று அழைக்கப்பட்ட தவத்திரு குன்றக்குடி. அடிகளார் மடாதிபதியாக இருந்து வந்தார்.

நாளை 699வது குரு பூஜை விழா மற்றும் குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நாளை (22ம்தேதி)குன்றக்குடியில் புதிதாக டாக்டர் பாரிவேந்தரால் கட்டப்பட்டுள்ள அன்னதான கட்டிடம் திறப்புவிழாநடைபெறுகிறது.

நாளை (22 ஆம் தேதி வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் முன்னாள் எம். பி. பாரி வேந்தர் அவர்களால் நன்கொடையாக கட்டப்பட்டுள்ள நூற்றாண்டு நினைவு அன்னதான கட்டிட திறப்பு விழா தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் மதுரை ஆதீனம் , ஓய்வு பெற்ற நீதி அரசர் மெ. சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலையில் . நடைபெறுகிறது.

புதிய குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு அன்னதான கட்டிடத்தினை டாக்டர் பாரிவேந்தர் திறந்து வைக்கிறார்.

அதை தொடர்ந்து தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் எழுதிய மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நூல் வெளியீட்டு விழா மதுரை ஆதீனம் முன்னிலையில் நீதியரசர் மெ. சொக்கலிங்கம் வெளியிட பாரிவேந்தர் பெற்றுக் கொள்கிறார்.

அதனைத் தொடர்ந்து பாரிவேந்தரை பாராட்டி திருப்பணிச் செம்மல் என்ற விருதினை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வழங்கி சிறப்புரைஆற்றுகிறார்..

மதுரை ஆதீனம் ஆசி உரை வழங்குகிறார். நீதியரசர் மெ.சொக்கலிங்கம் பாராட்டுரை வழங்குகிறார். பாரிவேந்தர் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆலோசனையின் பேரில் குன்றக்குடி ஆதீன அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





திண்டுக்கல், ஆக. 21-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அடுத்தாண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைந்த வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பட்டு அன்றிலிருந்து நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும். 2025ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். எனவே, அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLOs), வாக்கு பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றிற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். வயதுக்கான சான்றாக, பிறப்பு சான்றிதழ், ஆதார், பான் அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்பு சான்றிதல், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம் ஆகும்.

மேலும், http://voters.eci.gov.in, https://voterportal.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணியில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திற்குட்டபட்ட அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நெல்லை மாநகரத்தில் - 4 நாட்களுக்கு

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி உறுப்பினர் சேர்க்கை!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.ஆக.21-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி ஏற்பாட்டில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் 21.08.2024,22.08.2024,23.08.20248,26.08.2024 ஆகிய 4 நாட்கள் நடைபெறுகிறது. என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது. கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் - உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனித வள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி

நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை)சாகுல் ஹமீது (மேலப்பாளையம்) ஆகியோர் மற்றும் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நெல்லை மாநகர மகளிர் அணி மற்றும் மாநகர மகளிர் தொண்டர் அணி ஆகியோரின் ஏற்பாட்டில் மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடைபெறும் இடங்கள் வருமாறு.

இன்று( 21.08.2024-புதன் கிழமை) மாலை 5 மணி வார்டு 16 நெல்லை பேட்டை பகுதி உழவர் சந்தைடவுண்,

22.08.2024 வியாழக் கிழமை மாலை 5 மணி வார்டு 49 மேலப்பாளையம் பகுதி மாநகராட்சி மண்டபம்மேலப்பாளையம்,

23.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வார்டு 12 தச்சை பகுதி செல்வி அம்மன் கோவில் சமுதாய நலக்கூடம் மேகலிங்கபுரம், 2608 2024 திங்கட்கிழமை மாலை 5 மணி வார்டு 34 பாளை பகுதி சமுதாய நலக்கூடம் சமாதானபுரம்,மிலிட்டரி லைன் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

ஆகவே அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாநகரக் கழக,பகுதி கழக,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் பிறந்ததினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய, நகர் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.




சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தமிழக முதல்வர் அவர்களால் அருந்ததியர் சமூகத்திற்கு 3% உள் ஒதுக்கீடு அறிவித்து அதை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்திய முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாநில ஆதிதிராவிடர்நலக்குழு சார்பில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ .நகர்மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி நன்றி அறிவிப்பு கூட்டத்திற்கு தலைமையேற்று பேசினார். இந்த கூட்டத்தில் மானாமதுரை நகரக் கழக செயலாளர் க.பொன்னுசாமி, மேற்கு ஒன்றிய செயலாளர் எம் .அண்ணாதுரை, நகர்மன்ற துணைத்தலைவர் பாலசுந்தரம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து ஆகியோர் பேசினார்கள்.